செய்தி வெளியீடு எண். 222 நாள்: 26.04.2017

# திருவள்ளூர் மாவட்டத்தில் 526 ஊராட்சிகளில் 01.05.2017 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 526 ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டுகளில் சுழற்சி முறையில் குறைவெண் வரம்பின்படி, உறுப்பினர்களின் வருகை இருப்பதை உறுதி செய்து தொழிலாளர் தினமான 01.05.2017 அன்று காலை 11.00 மணிக்கு கிராமசபை கூட்டம் நடத்த அனைத்து ஊராட்சி ஒன்றிய தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்

குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல்.
கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்.
கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் (VPDP)
அந்தியோதயா இயக்கம்.
கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல்
திட்ட அறிக்கை
சுகாதாரம்

(அ) திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகள்.
(ஆ) கழிப்பறை கட்டி பயன்படுத்தும் பயனாளிகளுக்கு பாராட்டு தெரிவித்தல்.
(இ) குழுக்களுக்கு ஒத்துழைப்பு
(ஈ) கழிப்பறை இல்லாதோர் விவரப்பட்டியல்.
(உ) திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள்.
(ஊ) ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள்.
(எ) பள்ளி கழிப்பறைகள் மற்றும் அங்கன்வாடி மையக் கழிப்பறைகள்.
(ஏ) திடக்கழிவு மேலாண்மை திட்டம்.

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம்
அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சி கூடம்.
தாய் திட்டம் 2016-17.
ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு திட்டப்பபணிகள் முன்னேற்றம் மற்றும் நிதிசெலவின விவரங்கள் குறித்து விவாதித்தல்
மகளிர் திட்டம்
புதுவாழ்வு திட்டம்
இதர பொருட்கள்.

மேலும் கிராமசபை கூட்டங்களுக்கு பிற துறைகளை சார்ந்த அலுவலர்களையும் கலந்து கொள்ள செய்து அவர்களது துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி பணிகள் குறித்து பொது மக்களிடம் எடுத்துரைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த கிராம சபை கூட்டத்தில் பெருவாரியான மக்கள் பங்கேற்கும் பொருட்டு கிராம ஊராட்சிகளில் முழுமையான அறிவிப்புகள் மற்றும் விளம்பரங்கள் செய்து சிறப்பான முறையில் கிராம சபை கூட்டத்தை நடத்திடுமாறு அனைத்து ஊராட்சி ஒன்றிய தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)களை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அவர்கள் கேட்டுக்கொள்கிறார். கிராம சபை கூட்ட ஏற்பாடுகளை கண்காணிக்கவும், பார்வையிடவும் ஊராட்சி ஒன்றிய அளவில் உதவி இயக்குநர் நிலையில் மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~